R 5466

# ஆர்வத்தைத் தூண்டும் கேள்வி

## AN INTERESTING QUESTION

**கேள்வி : தானியேல் 4:17 மற்றும் ரோமர் 13:1,2 வசனங்களிலிருந்து, தேவன் தேசங்களின் நடவடிக்கைகளில் வழிகாட்டுகிறார், அவர்களது ஆட்சியாளர்களைத் தெரிந்தெடுக்கிறார் என்று நாம் புரிந்துகொள்ளலாமா ?**

**பதில் :** ''உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார்'' – தானியேல் 4:17

''எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை, உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்'' – ரோமர் 13:1,2.

மேற்கண்ட வசனங்கள், மற்ற வேத வசனங்களின் அறிக்கைகளோடு இணக்கமாயுள்ளன. உதாரணமாக, நேபுகாத்நேச்சாரின் விஷயத்தில், அவர் 7 வருடங்கள் பித்துப்பிடித்த நிலையில், வெளியின் மிருகங்களோடு சஞ்சரித்தபிறகு, அவருடைய புத்தி அவருக்குத் திரும்பினது. பரலோகத்தின் தேவனை அவர் புகழ்ந்து, ஸ்தோத்தரித்து, அவர் தமக்கு சித்தமானவரை உயர்த்துகிறார், தம் தீர்மானத்தின்படி, யாரை தாழ்த்த சித்தம் கொள்கிறாரோ, அவ்வாறே செய்கிறார் என்றான். தேவனுடைய செயல்தொடர்பு நேபுகாத்நேச்சார் ராஜாவுடன் தீர்க்கதரிசனப்படி இருந்தது என நாம் புரிந்துகொள்கிறோம்.

இஸ்ரயேலரின் விஷயத்தில், அவர்களுடைய நடவடிக்கைகள்மேல் , அவரது மேற்பார்வை மிக குறிப்பிடும்படியாக இருந்தது. தாவீது சிறுவனாக இருக்கும்போதே அபிஷேகம் பண்ணப்பட்டு, சவுலுக்கு பதிலாக ஏற்றவேளையில் ராஜாவானார். அவ்வாறே அவர்களுடைய பல ராஜாக்களிடத்திலும் நிகழ்ந்தது. கர்த்தர் முன்கூட்டியே அவர்களை அபிஷேகம் பண்ணினார். சிங்காசனத்தின்மீது யார் உட்கார்ந்தாலும், அவர் கர்த்தருடைய பிரதிநிதியாகவே இருந்தார் என இஸ்ரயேலைக் குறித்து சொல்லப்பட்டது. ஒரு தருணத்தில், தேவனுடைய தீர்க்கதரிசி , சிரியா ராஜாக்களிடத்திற்கு அனுப்பப்பட்டு, அவரைக்குறித்த தீர்க்கதரிசனத்தை எடுத்துரைத்து, அவர் சிங்காசனத்தின்மீது அமரவேண்டுமென சொல்லி அபிஷேகம் செய்ததை நாம் நினைவுகூர்கிறோம்.

பாரவோனுடைய விஷயத்தைப் பின்னோக்கிப் பார்க்கையில், மூர்க்கமான இந்த எகிப்திய ராஜாவைக் குறித்து தேவன் அறிவித்தார்; என் வல்லமையை உன்னிடத்தில் நான் விளங்கப் பண்ணும் இந்த நோக்கத்திற்காகவே நான் உன்னை எழுப்பினேன்''. தேவன் பார்வோனை அங்கீகரிக்காதபோதிலும், தம் சொந்த மகிமை விளங்கும்படி அவரை பயன்படுத்தினார். மேலும் தேவன் பெர்சிய ராஜாவாகிய கோரேஸையும் தம் ஆணையை நிறைவேற்றும் தம் ஊழியனாக உபயோகித்தார்.

### தற்கால நிகழ்வுகளை தேவன் கண்காணிக்கிறார்

இந்த பதிவு செய்யப்பட்டசம்பவங்களனைத்தும், தம் சொந்த திட்டத்திற்கு பாதிப்பேற்படுத்தும்படி அல்லது தாமதப்படுத்தும்படி, யார் முன் வருவர் என்ற முக்கியமான ஆர்வத்தை தேவன்பேரில் ஏற்படுத்துகிறதைக் காண்பிக்கிறது. இந்த வித்தியாசமான ராஜாக்கள், தேவனுக்கு உண்மைத்தன்மையோடிருந்து, அவரால் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தவர்களை அடையாளப்படுத்துகிறார்கள் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, இவர்கள் மூலமாக தெய்வீகத் திட்டம் செயல்பட்டது, ஒரு சமிக்சையாக வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே இன்றைக்கும் நிகழ்கிறது. கிபி 1912ன் முடிவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஜனாதிபதியாக போட்டியிடுவோரில் ஆளுகைக்கு வர மிக தகுதியான நபர் யார் என்று கர்த்தர் அறிவார். அந்நேரத்தில் கடந்தோட தாம் அனுமதிக்கப்படும் நிலைமைகளோடு இணக்கமாக செயல்பட யார் தகுதியானவர் என்று அவர் அறிவார்.

கர்த்தர் தற்போது தேசங்களின் நடவடிக்கைகளில் வழிகாட்டுகிறார். தம் சொந்த தீர்மானங்களை நிறைவேற்ற ஊக்குவிக்க மட்டுமே இப்படிப்பட்ட மேற்பார்வையிடுகிறார். பல்வேறு நாடுகளின் மன்னர்கள் (Monarchs), தங்களை ''தேவகிருபையினால் உண்டான ராஜா'' என்று அறிவிக்கும் தங்கள் சொந்தக் கருத்தை, நாம் ஏற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த கருத்தையே, அதாவது அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக, அவரது விசேஷ தயவின்மூலம் ஆளுகை செய்வதாக தங்களை வெளிப்படுத்தி வந்தனர் என்ற கருத்தையே இவைகள் வெளிப்படுத்துகின்றன.

அதுபோலவே, கத்தோலிக்க சபையும், கிறிஸ்தவ சபையின் தலையாக போப்பு இருப்பதாயும், அவரே கிறிஸ்துவின் பிரதிநிதியாகவும் இருப்பதாயும் உரிமை பாராட்டினது. கிறிஸ்து தம் ராஜ்யத்தை ஸ்தாபித்திருப்பதாகவும், அவருக்கு பதிலாக தான் ஆளுகை செய்வதாகவும் போப்பு உரிமை பாராட்டினார்.

### தேவதிட்டம் செயல்படுத்தப்பட மேலாட்சி செய்தல்

ஐரோப்பாவில் போப்புவின் அதிகாரம் குறைந்தபிறகு, புராட்டஸ்டன்ட்டுகள் அதிகாரத்துக்கு வந்தனர். கத்தோலிக்கர்கள் உரிமை பாராட்டினபடியே, புராட்டஸ்டன்ட்டுகளும் உரிமை பாராட்டி, கர்த்தருடைய விசேஷ பிரதிநிதிகளாக அதிகாரம் செலுத்தினர். இந்த நிலைப்பாட்டின்படியே, ராஜாக்கள் தேவகிருபையினால் ஆளுகை செய்வதாக தங்களை நிலைநிறுத்தி வந்தனர். தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும், அதன்படி, தாங்கள் தேவனுடைய ராஜ்யங்களை ஆளுவதாகவும் கூறிக்கொண்டனர். இது சரியான கருத்தாக நாங்கள் புரிந்துகொள்ளவில்லை, மாறாக, தற்காலத்துக்கு உலக சிம்மாசனங்களை ஆக்கிரமிப்பதற்கு தேவனுடைய ஏற்பாடு அனுமதித்திருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில், தேவன் மேற்பார்வையாளராயிருந்து கண்காணிக்கிறார் என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம். அவருக்குப் பிரதிநிதிகளாக இருக்க அவர் அவர்களுக்கு அதிகாரமளிக்கவில்லை, அல்லது, அவர்களுடைய செயல்களுக்கும் அவர் பொறுப்பாளியல்ல. மாறாக அவர் காரியங்களை கட்டுப்படுத்தி, தம் சொந்த ஏற்பாடுகளை அவர்கள் செயல்படுத்தும்படி செய்கிறார்.

இதைச் செய்வதற்காக, தேவன் ஒரு ராஜாவை மனம்மாற்றுவதில்லை,அவரை பரிசுத்தவானாக்குவ–தில்லை. அதற்கு மாறாக, எந்த தனிப்பட்ட மனிதனுடைய சுயாதீனத்திலும் குறுக்கிடாமல், அவரால் நிகழ்வுகளை அனுமதிக்கவோ அல்லது தடுக்கவோ முடியும். தனி மனித அரசாங்கத்துக்கு தாம் பொறுப்பாளியாகாமலும் இருக்கமுடியும்.

இந்த தெய்வீக வல்லமையின் மேற்பார்வை, மனுக்குலத்தின் இறுதி நன்மைக்கென்றே இருக்கிறது என்று நாம் உறுதியளிக்கிறோம். இருளின் அதிபதி ஒருவன் இருக்கிறான், அவன் மனுக்குலத்திற்கு தீங்கு செய்யத் தேடுகிறான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தெய்வீக வல்லமை தடைசெய்கிறது அல்லது கட்டுப்படுத்தப்படுகிறது என்பதே நம் கருத்தாயிருக்கிறது. அதனால் ஏற்றவேளை வரும்வரை, மிக மோசமான காரியங்கள் கடந்துவராது. அவருடைய ஏற்றவேளை வந்திருக்கும்போது, அவர் எதை அனுமதிக்க தீர்மானிக்கிறாரோ, அதற்குரிய குணஇயல்பை பெற்றிருப்போரால் அவை நிறைவேறும்படி தேவன் மேலதிகாரம் செலுத்துவார். ஆயினும், இதை எவ்வாறு செய்கிறார் என்று கர்த்தர் நமக்கு விவரிக்க– வில்லையாதலால், நம் வார்த்தைகளை அதிக வலுவாக முன்வைப்பது ஞானமில்லாத செயலாக நமக்கு இருக்கும்.

–––––––––